**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 90/2024</u>**

பெயர் : முகமது அம்ஜத் P.W.1. Cross

த/பெ. : முகமது இக்பால்

தேதி : 12.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : –</u>

1. தாவா சொத்தை நான் யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் சாஜிதா பர்வீனின் பவர் ஏஜென்ட் அப்துல் ரஜாக் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நான் ஆக்கூர் மடப்புரம் கிராமத்தில் பிறந்தது முதல் வசித்து வருகிறேன். தாவா சொத்து உடையவர்கோவில் பத்து கிராமத்தில் உள்ளது. தாவா சொத்திற்கும் நான் வசித்து வரும் இடத்திற்கும் 1 ½ கிமீ தொலைவு இருக்கும். தாவா சொத்து எனக்கு 2023ம் ஆண்டு முதல் தெரியும். 2023ம் ஆண்டு தாவா சொத்து நஞ்சையாக இருந்தது அல்லது புஞ்சையாக இருந்ததா என்றால் திடலாக இருந்தது. தற்போதும் தாவா சொத்து திடலாக தான் உள்ளது. தாவா சொத்தின் உரிமையாளருக்கும் பவர் ஏஜெண்டிற்கும் என்ன உறவு முறை என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

2. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் உளுந்து பயிர் செய்தேன். நான் தாவா சொத்தை 15.04.2024 அன்று கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்து யார் அனுபவத்தில் இருந்தது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 2025ம் ஆண்டு யார் தாவா சொத்தில் விவசாயம் செய்தார்கள் என்றால் நான் உளுந்து விதைப்பற்கானக சென்ற போது அங்கு பிரதிவாதி ஆட்களை வைத்து வேலை செய்துகொண்டிருந்தார். நான் அவரை தடுத்து நிறுத்திவிட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் விலைக்கு வாங்கிய நிலத்தில் எந்த உரிமையின் அடிப்படையில் நீங்கள் விவசாயம் செய்கிறீர்கள் என நான் பிரதிவாதியிடம் கேட்டதற்கு அந்த நிலம் அவருடைய அனுபவத்தில் இருப்பதாக என்னிடம் கூறினார். காவல் நிலையத்தார் இருதரப்பினரையும் அழைத்து சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணும்படி கூறி எழுதி வாங்கிகொண்டார்கள். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் மனு ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதி என்னை தடுக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் நான்புகார் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. சாஜிதா பர்வீனின் முகவரி மற்றும் அவரது வாரிசுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாஜிதா பர்வீனுக்கு தாவா சொத்து எப்படி கிடைத்தது என்றால் அவரது கணவர் அவருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கிடைத்தது. சாஜிதா பர்வீன் கணவரின் உடன்பிறந்தவர்கள யார் யார் என்றும் அவர்களது பெயரும் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள். தாவா சொத்தினை சாஜிதா பர்வீனின் மாமனார் சையது உசேன் அவர்கள் பிரதிவாதிக்கு அவர்களது வீட்டில் பண்ணை வேலை பார்த்ததற்காக உழவடை பாத்தியமாக கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாஜிதா பர்வீனின் மாமியார் பெயர் தெரியுமா என்றால் சம்சுல் மஹரிபா ஆகும். தாவா சொத்தினை பிரதிவாதி கடந்த 30 ஆண்டுகளாக பயிர் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தினை உழவடை பாத்தியமாக பெற்ற பிறகு சையது உசேன் மற்றும் அவரது மனைவி மறைவிற்கு பிறகு அவர்களது வாரிசுகளிடம் தாவா சொத்தை பத்திர பதிவு செய்து தருமாறு பல முறை கேட்டும் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் பத்திர பதிவு செய்து தருவதாக இது வரை சொல்லி வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது திடல் இல்லை வயல் என்றால் என்னிடம் பவர் ஏஜெண்ட் சொல்லும் போது திடல் என்று தான் சொன்னார்கள். நான் திடலை தான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை என்னிடம் ஒப்படைக்க கோரி பிரதிவாதியிடம் பேச்சுவார்த்தை நடத்தினேனா என்றால் இல்லை. எத்தனை ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. தாவா சொத்து 120 குழி திடலாகும். நான் கிரயம் பெற்றுள்ள இடமும் பிரதிவாதி அனுபவத்தில் உள்ள இடமும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணமும் முறையாக செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு முன்பாக தாவா சொத்து குறித்து அனைத்து மூல ஆவணங்களையும் சரிபார்த்து தான் கிரயம் பெற்றேனா என்றால் பெற்றேன். அந்த மூல

ஆவணங்களின் நகல்கள் மட்டும் என்னிடம் உள்ளது. அந்த நகல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். தாவா சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.